டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 7 லட்சம் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. 2 கிணறுகள்தான் உள்ளன. ஜவ்வாது மலையின் அடிவாரத்தில் உள்ள வலசை கிராமத்தில் நீர் ஊற்று இல்லாத காரணத்தினால் செங்கத்தில் ஓடும் செய்யாறு ஆற்றில் கிணறு தோண்டப் பட்டுள்ளது. வறட்சிக் காலத்திலே மணல் ஊற்று, அடி ஊற்று வற்றி நீர் ஊற்று நின்றுவிடுகிறது. எனவே, 4-வது கிணறு தோண்டி செங்கம் நகருக்கு குடிநீர் பிரச்சினை தீர அரசு ஆவன செய்யுமா? தோப்பவாடி கிராமத்திலே வறட்சி நிவாரண திட்டத்தில் கிணறு வெட்டப்பட்டு இருக்கிறது. தோப்பவாடி கிணற்றில் தூர் வாரப்பட்டால் தண்ணீர் பிரச்சினை நீங்கும் நிலை ஏற்படும். இதை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விழைகின்றேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரினுடைய குடிநீர் தேவையினுடைய அளவை மையமாகக் கொண்டும், பெருகி வரும் மக்கள் தொகையைக் கணக்கிலே கொண்டும், செங்கம் நகர் முழுவதற்கும் தேவையான குடிநீரை முழுமையாக வழங்க தென் பண்ணை ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு, அதிலிருந்து குடிநீர் சேகரித்து, வழிப்புற கிராமங்களுக்கும் பயன்படும் அளவில் திட்டம் அமைக்க ஒரு முழுமையாக ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 415, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை.

வினா எண் 416. திரு. தே. ஜனார்த்தனன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

416—

விழுப்புரத்தில் கால்நடை மருத்துவமனை கட்டுதல்

*98742—திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் கால்நடை மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

1993 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் விழுப்புரத்தை மாவட்ட தலைநகராக அறிவித்திருக்கிறார்கள். ஏறக்குறைய எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அதைக் கருத்திற் கொண்டு, நாங்கள் இடம் தேர்வு செய்து கொடுத்தால், இந்த ஆண்டே கால்நடை மருத்துவமனையை அரசு அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விழுப்புரம் நகராட்சி எல்லைக்குள் விழுப்புரம் கால்நடை மருந்தகம் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி ஆணையரிடம் ஒரு புல எண்ணைக் கொடுத்து, இதற்குட்பட்ட நிலத்தின் உரிமையை இந்தத் துறைக்கு மாற்றித் தரவேண்டுமென்று கேட்டிருந்தோம். ஆணையர் அவர்கள் அந்த இடத்திலே மனமகிழ் மன்றம் கட்ட வேண்டுமென்று சொல்லி, அந்த இடத்தைத் தரவில்லை. எனவே அங்கே கால்நடை மருந்தகம் கட்டவில்லை. இடத்தைத் தருவார்கள் என்று சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 417, திரு. க. அர்ச்சுனன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

417—

தோட்டக்கலைத் துறை மூலம் மானிய விலையில் வழங்கப்படும் செடிகள்.

*16533—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலைத் துறை மூலம் மான்ய விலையில் வழங்கப்படும் செடிகள் தரமற்றதாக இருப்பதையும் அதற்கும் வெளி அங்காடி விலைக்கும் வேறுபாடு ஏதும் இல்லை என்பதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?